பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

16 10 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆந்திரப்பிரதேச மாநிலம் கர்னூலில் 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

2. அகமதாபாதில் 2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. இலங்கை பிரதமர் திருமதி ஹரினி அமரசூர்யா இரண்டு நாள் இந்திய பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

4. தேசிய நெடுஞ்சாலைகளில் Fastag வருடாந்திர அனுமதிச் சீட்டை பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை 25 லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. மலேசியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆந்திரப்பிரதேச மாநிலம் கர்னூலில் 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து உரையாற்ற உள்ளார்.

தொழில்துறை, மின்சாரம், சாலைகள், ரயில்வே, பாதுகாப்பு தளவாட உற்பத்தி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு உள்ளிட்ட துறைகளின் பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும்.

ஸ்ரீசைலத்தில் உள்ள ஸ்ரீபிரம்ராம்பிகை மல்லிகார்ஜுன சுவாமி வர்லா கோயிலில் பிரதமர் தரிசனம் செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அகமதாபாதில் 2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டிற்கு பெரும் மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட தொடர் முயற்சிகளுக்கு இது ஒரு சிறந்த அங்கீகாரம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள பதிவில், உலக அளவிலான விளையாட்டுத் துறையில் வளர்ந்து வரும் இந்தியாவின் ஆதிக்கத்தை இம்முடிவு பிரதிபலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு தலைமையால் இது சாத்தியமானது என்றும் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

<<<<>>>>

ராணுவ வீரர்களுக்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தயாரித்துள்ள பாராசூட்டை 32 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து குதித்து விமானப்படை வீரர்கள் வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தனர்.

துல்லியமாக குறிப்பிட்ட இடங்களில் தரையிறங்கக் கூடிய வகையில் இந்த பாராசூட் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது ராணுவத்தினர் பயன்படுத்தும் பாராசூட்களில் 25 ஆயிரம் அடிக்கு மேல் செயல்படக்கூடிய பாராசூட் இது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பாராசூட்டை வெற்றிகரமாக சோதனை செய்ததற்காக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திற்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பு திறனுக்கான குறிப்பிடத்தக்க சாதனை இது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இலங்கை பிரதமர் திருமதி ஹரினி அமரசூர்யா இரண்டு நாள் இந்திய பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

இருதரப்பு முக்கிய விவகாரங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து மூத்த அரசியல் தலைவர்களுடன் அவர் விவாதிக்க உள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள மாநாட்டிலும் அவர் உரையாற்ற உள்ளார்.

தில்லி ஐ.ஐ.டி. மற்றும் நிதி ஆயோக் அலுவலகத்திற்குச் செல்லும் அவர், கல்வி, புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்க உள்ளார்.

அத்துடன் வர்த்தகம் தொடர்பான நிகழ்விலும் இலங்கைப் பிரதமர் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்திய பொருட்கள் மீது 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது, இந்தியாவின் வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பில்லை என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச செலாவணி நிதியம் - உலக வங்கிக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், உள்நாட்டுப் பொருளாதாரத்தால் இந்தியாவின் வளர்ச்சி நீடிப்பதாக கூறினார்.

அமெரிக்க அதிகாரிகளுடன் வர்த்தகம் தொடர்பான அடுத்த சுற்று பேச்சுகளில் ஈடுபடுவதற்காக இந்திய குழு வாஷிங்டனில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ள நிலையிலும் நடப்பு நிதியாண்டின் முதல் 6 மாத காலத்தில் அமெரிக்காவுக்கு 45 புள்ளி எட்டு இரண்டு பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைவிட 13 புள்ளி 3 சதவீதம் அதிகமாகும்.

<<<<>>>>

Fastag வருடாந்திர அனுமதிச் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்ட 2 மாத காலத்தில் அதை பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை 25 லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து தெரிவித்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளில் உள்ள ஆயிரதது 150 சுங்கச்சாவடிகளில் இந்த வருடாந்திர அனுமதிச் சீட்டு மூலம் மொத்தம் 5 கோடியே 67 லட்சம் பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி போட்டியிடும் 101 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

3வது மற்றும் இறுதி வேட்பாளர் பட்டியலில் 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அதன்படி Narkatiaganj தொகுதியில் திரு. சஞ்சய் பாண்டேவும், Chanpatia தொகுதியில் திரு. Umakant Singh-கும், Chiraia தொகுதியில் Lalbabu Prasad Gupta-வும் பிஜேபி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

தீபாவளி பொனான்ஸா என்ற பெயரில் ஒரு ரூபாய் கட்டணத்தில் ஒரு மாத கால சேவை வழங்கும் ப்ரீபெய்ட் திட்டத்தை பி.எஸ்.என்.எல். அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் ஒரு மாத காலத்திற்கு நாள்தோறும் எண்ணற்ற அழைப்பு வசதிகள், 2 ஜி.பி. அளவிலான தரவுகள் உள்ளிட்ட சேவைகளைப் பெற முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தப் பண்டிகை கால சலுகை அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை வழங்கப்படும் என்று BSNL தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகை ரயில் நிலையத்தில் 117வது மலை ரயில் தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

யுனெஸ்கோ அமைப்பால் பாரம்பரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள இந்த ரயிலின் சிறப்பம்சங்கள் குறித்து சுற்றுலாப் பயணிகளுக்கு விளக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Saravanan - 32 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இன்று தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்த நிலையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்துள்ளது.

கனமழை காரணமாக தமிழகத்தில் திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மலேசியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அவர், 19-21, 21-18, 21-12 என்ற செட் கணக்கில் மலேசியாவின் Sholeh Aidil-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் Isharani Baruah - அஸர்பைஜானின் Kaisha Fathima-வை வென்றார்.

<<<<>>>>

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 10-21, 21-8, 21-18 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் Nhat Nguyen-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை 17-21, 21-11, 21-17 என்ற செட் கணக்கில் ஸ்காட்லாந்தின் கிரிஸ்டோஃபர் கிரிம்லே - மாத்யூ கிரிம்லே இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் நிதின் குமார் - ஹர்ஷ்ராணா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Gnana Dattu இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 11-15, 15-6, 15-11 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய வீரர் Suryaksh Rawat-ஐ வென்றார்.

<<<<>>>>

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் பேட் செய்து வரும் ஜார்கண்ட் அணி முதல் நாள் ஆட்டநேர இறுதியில் தமது முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 307 ரன் எடுத்தது.

<<<<The End>>>>